# வென்னப்புவ பிரதேச சபை

## புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 14 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, வென்னப்புவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வென்னப்புவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2001 ஆம் ஆண்டின் ரூபா 1,376,770 தொகையான நிதி மோசடி தொடர்பாக உத்தியோகத்தருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பாக அருவகச் செலவினம் வெளிப்படுத்தப்பட்டு இதற்காக போதிய ஒதுக்கங்கள் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 உப அலுவலகங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 329,793 தொகையான கையிலுள்ள காசு மீதி நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(இ) கிரிமெட்டியாவ மயானத்தில் ரூபா 3,742,247 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கான வருமானத்தில் பங்களிப்புக் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் மாகாண சபை மானியமாகப் பெறப்பட்டிருந்த 28 – 2537 ஆம் இலக்க ஹினோ வண்டியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பரீட்சை மீதியில் காணப்படும் செலுத்தப்பட வேண்டிய முத்திரை வரி ரூபா 140,486 தொகையும் சுனாமி அன்பளிப்புத் தொகையான ரூபா 650,685 தொகையும் ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

(உ) நிலுவையான வருமானத்தொகையான ரூபா 3,042,041 தொகையின் வருமான கடன்பட்டோர் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நானாவித கடன்கொடுத்தோர் மீதியில், இரட்டைக் கணிப்பீடு, இரத்துச் செய்தமை, நேர் உழைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்டமை மற்றும் செலுத்தப்படலாகாத பெறுமதி சேர் வரி உள்ளடக்கப்பட்டமை போன்ற காரணத்தால் ரூபா 3,919,320 கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம், ஊழியர் கடன் கணக்கின் மீதி ரூபா 7,505,517 ஆகக் காணப்பட்டதுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தனியான மீதிப் பட்டியலின் படியான மீதி ரூபா 5,218,917 ஆகக் காணப்பட்டது. இதன் படி ரூபா 2,286,600 தொகையான வேறுபாடு கண்டறியப்பட்டது. இவ் வேறுபாட்டிற்கான காரணம் தெளிவூட்டப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஏ) 2012 திசெம்பர் மாதத்தின் போது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் கண்டறியப்பட்ட ரூபா 389,297 தொகையான தொங்கல் கணக்கு தொடர்பான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 262,240,256 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 42,600,136 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 50,156,512 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 9,541 | 8,121 | 4,482 |
| (ii) | வாடகை | 32,662 | 28,175 | 2,229 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 7,543 | 6,576 | 48 |
| (iv) | ஏனைய வருமானம் | 134,171 | 65,092 | 161,173 |

### 2.2.2 வீதவரி

மீளாய்வாண்டிற்காக வீதவரிக்காக பட்டியலிடப்பட்ட ஆதனங்கள் 7,618 இல் 4,727 ஆதனங்களிலிருந்து மாத்திரமே வரி அறவிடப்பட்டிருந்ததுடன் அது பட்டியலிடப்பட்ட அளவில் 62% ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் 1912 அலகுகளிற்கான ஒரு வருட காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட நிலுவை வீதவரியின் அளவு ரூபா 1,846,045 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 வாடகை

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 14 ஆதனங்களுக்கு உரித்தான ஒரு வருட காலத்திற்கு மேற்பட்டிருந்த நிலுவை வாடகைப் பெறுமதி ரூபா 1,957,335 ஆகக் காணப்பட்டது.

(ஆ) வென்னப்புவ சந்தைத் தொகுதியில் சதுர அடி 4,440 ஐக் கொண்ட மேல்மாடி 2 வருட காலமாக வாடகை இன்றி வர்த்தகச் சங்கங்களுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 ஏனைய வருமானம்

சபையால் முச்சக்கர வண்டி மற்றும் வான் வாகனத் தரிப்பிடப் பதிவு செய்தல் மற்றும் வென்னப்புவ பஸ் தரிப்பிடக் கட்டணம் அறவிடப்படுவதனால் வருமானம் உழைக்கப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 6,491,943 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 153,906,250 |

### 2.3 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது நடாத்தப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 326,335 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வடமேல் மாகாணத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 28 – 2537 ஆம் இலக்க ஹீனோ வண்டி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாத உடைந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு முதல் வென்னப்புவ நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 5,649,080 பெறுமதியான தீ அணைக்கும் வண்டி மீளாய்வாண்டிலிருந்து ரூபா 43,806 பெறுமதியான கே 75 வகையான இரண்டு சக்கர உழவு இயந்திரம் பல வருட காலமாக செயற்பாடற்று தலைமை அலுவலக வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 299,126 பெறுமதியான 3 இரண்டு சக்கர உழவு இயந்திரங்களும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத இலக்கமற்ற இரண்டு சக்கர உழவு இயந்திரமும் அன்பளிப்பாகப் பெறப்பட்டிருந்த தார் தெளிக்கும் இயந்திரமும் கிரிமெட்டியான உப அலுவலக வளாகத்தில் பல வருட காலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பாதீட்டின் படி 220 கைத்தொழில்களை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இதில் 146 மேற்கொள்ளப்பட்டிராததுடன் பூர்த்திசெய்யப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை 74 ஆகும்.

(ஆ) மகநெகும அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் 10 வீதிகள் கொங்கிரீட் கற்கள் பதிக்கப்படுவதற்காக ரூபா 10,000,000 வழங்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய 10 வீதிகளில் ரூபா 3,000,000 பெறுமதியான 03 வீதிகளின் நிர்மாணிப்புகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. எஞ்சிய நிர்மாணிப்புகளின் பௌதீக முன்னேற்றம் 10மூ ஆகக் காணப்பட்டது.

(இ) ''கமி அருனலு'' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 100,000 படி 99 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படுவதற்கு ரூபா 2,766,000 பெறுமதியான 20 செயற்திட்டங்கள் மாத்திரமேயாகும். பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை 7 ஆகக்

காணப்பட்டதுடன் இதன் படி நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம் 7% ஆகக் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்ட 141 கைத்தொழில்கள் அவ்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த 74 ஆகக் காணப்பட்டதுடன் எஞ்சிய 67 குறைவேலையாகக் காணப்பட்டது.

**2.6 சிரிகம்பல விளையாட்டுத்திடல் விஸ்தரித்தல்**

2013 ஜுலை மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(அ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிடமுள்ள தீர்மானிக்கப்பட்ட விளையாட்டு மைதானம் அமைந்துள்ள வளாகம் சபையால் கையேற்கப்படாது இதற்கான ஒப்பந்தம் ரூபா 10,000,000 இற்கு சிறிகம்பல சமுர்த்தி படையணிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) உரிய காணி பள்ளமான காணி என்பதால் நீர் தேங்கி நிற்பதைக் காணக்கூடியதாக இருந்தது. பிரதேசத்தில் மழை நீர் தேங்கும் இடம் என்பதால் மழை நீர் வழிந்தோடுவதற்கு முறையான வடிகால் முறைமை தயாரிக்கப்படாது அக் காணி நிரப்பப்படுவதன் மூலம் அப் பகுதியைப் போன்று விளையாட்டுத்திடலும் மழை நீரால் தாழ்வதற்கான எச்சரிக்கை நிலவியது.

(இ) உரிய சமுர்த்தி படையணி அச் செயற்பாட்டை மேற்கொள்ளாமை உறுதிப்படுத்தப்பட்டதுடன் வேறு நபர்களால் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.7 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) காணி கூறாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகையில் பொது வசதிகளுக்காக சபைக்கு வழங்கப்பட்டிருந்த காணி கூறாக்கல்

மெய்மையாய்வு சபையின் மூலம் மெய்மையாய்வு செய்யப்பட்டு உரிமை உறுதிப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுவதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக மேலும் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்